விலை: 30/=
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 37 கதிர் : 64
சனிக்கிழமை 29 ஜனவரி 2022
தை 16 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16

**கொரோனா**
நேற்று 961
மொத்தம் 6.08.065

**உயிரிழப்பு**
நேற்று 17
மொத்தம் 15.386



முச்சந்தி முரளி

"எங்களுக்குள்ளேயே நாங்கள் கன்னை பிரிஞ்சு அடிபட்டால் சமஷ்டி எப்பிடிக் கிடைக்கும் எண்டு சொல்லுங்கோ பாப்பம்..."

## புதிய அரசமைப்பில்
# எமக்குத் தீர்வு மறுக்கப்பட்டால்
# வெளியக சுயநிர்ணயமே முடிவு

*தமிழ்க் கட்சிகளின் ஊடகச் சந்திப்பில் மாவை சேனாதிராசா தெரிவிப்பு*



படம் - ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், ஜனவரி 29

புதிய அரசமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய உரிய தீர்வு இல்லையேல் நாம் சர்வதேச சாசனங்களுக்கு அமைவாக வெளியக சுயநிர்ணய உரித்தைக் கோருவோம். இதை ராஜபக்சக்களுக்கும், இந்திய அரசுக்கும் தெளிவாகச் சொல்லியுள்ளோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார். 15

## கோயபல்ஸின் வேலையை முன்னெடுக்கும் முன்னணி!

விக்கி. எம்.பி. சாடல்

யாழ்ப்பாணம், ஜன. 29

ஒரு பொய்யை திரும்பத் திரும்பக் கூறினால் மக்கள் அதை உண்மை என்று நம்புவார்கள் என்ற உளவியலை நம்பி ஹிட்லரின் ஊடகப் பேச்சாளராக இருந்த கோயபல்ஸ் முன்னெடுத்த வேலையை இப்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மேற்கொள்கின்றனர்? இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 15

மோடிக்கு எழுதிய கடிதம்:

## முன்னணிக்கு பதிலடியாக மாபெரும் பொதுக்கூட்டம்

சுரேஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதம் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் முதலாவது மாபெரும் பொதுக்கூட்டத்தை 15

## இந்தியாவுக்கு கடிதம் கையளிப்பு தெற்கு மக்களை கோபமூட்டும்

தமிழ்க் கட்சிகள் - ஜனாதிபதி சந்திப்பு விரைவில் நடக்கும் என்கிறார் நீதி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 29

அரசியல் தீர்வு உட்பட தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் அழைத்து சந்திப்பு நடத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் விடுத்த 15

## வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 29

கீழைக் காற்றின் செல்வாக்கின் காரணமாக எதிர்வரும் திங்கட்கிழமை வரை வடக்கு மாகாணம் முழுவதும் பரவலாக மழை கிடைக் 15

## கோப்பாய் கலாசாலை கொரோனாவால் பூட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 29

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர் ஒருவருக்கும், 10 மாணவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை கலாசாலை பூட்டப்பட்டுள்ளது. 15

## வடக்கில் கொரோனா மீண்டும் அதிகரிப்பு!

*வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி 15



ஊர்காவற்றுறையில்

## இந்திய மீனவர்களுக்கு எதிராக நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஜன. 29

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக ஊர்காவற்றுறையில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊர்காவற்றுறை சந்தியில் இருந்து ஆரம்பித்த இந்தப்போராட்டம்பேரணியாக ஊர்காவற்றுறை 15

## தெல்லிப்பழையில் ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 29

தெல்லிப்பழைப் பகுதியில் வைத்து ஹெரோய்னுடன் நேற்று மாலை ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சுன்னாகத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப்பட்டவர்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் தெல்லிப் 15

உயர்தரப் பரீட்சையை

## ஒத்திவைக்கக் கோரி நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜன. 29

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை 20 வாரங்களுக்கு ஒத்தி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளித்தலையீடுகளாலேயே

# பயங்கரவாதச் சட்டம் மறுசீரமைப்பு இப்போது சாத்தியமாகியுள்ளது

### மனோ எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 29**

**பயங்கரவாதத் தடைச்சட்டம் மீள் திருத்தப்படும் வர்த்தமானி பிரகடனம் வெளியாகியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை ஆகியவற்றுக்காக அரசு சார்பாக வெளி விவகார அமைச்சர் பீரிஸ், இதை வேறு வழியில்லாமல் அறிவித்துள்ளார். எனினும் இதுவும் ஒரு முன்னேற்றம்தான். ஆனால், இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற எமது குரலை நாம் நிறுத்திவிடக்கூடாது.**



இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

வெளிவிகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதர்களை அழைத்து, பயங்கரவாத தடை சட்ட திருத்தங்கள் பற்றி அறிவித்துள்ளமை மற்றும் இது பற்றிய வர்த்தமானி வெளி யாகியுள்ளமை தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதற்கான காலம் இன்று கனிந்து விட்டது என நினைக்கி றேன். ஏனெனில் போர் முடிந்த பத்து ஆண்டுகள் ஆன பிறகும் நடைமுறையிலிருக்கும் இந்தச்சட்டம் ஏற்கனவே கணிசமான துன்புறுத்தல்களைத் தந்துகொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக தமிழ் பேசும் மக்களை நோக்கி இது பாய்கிறது.

ஆனால், இதில் நடப்பு ராஜபக்ச அரசை மட்டும் குறை கூற முடியாது. இந்த அரசு மட்டுமல்ல, எந்த இலங்கை அரசும் முழுமையாக இந்தச்சட்டத்தை நீக்க முன்வர வில்லை.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் மீளத் திருத்தப்படுகிறது என்று வெளிவிவகார அமைச்சரால், ஜனவரி 21ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி பிரகடனம், எமக்கு ஓர் அடிப்படை உண்மையை மீளவும் எடுத்து உரைக்கிறது. ஐ.நா.வோ, அமெரிக்காவோ, ஐரோப்பிய ஒன்றியமோ, இந்தியாவோ, ஏதாவது வெளிச்சக்திகள் சொன்னால்தான் இந்த அரசு கொஞ்சமாவது நகருகிறது. இதுதான் இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்- என்றுள்ளது. (ஒ-இ)



## ஆளுமைமிக்க அதிபரை நியமனம் செய்யுங்கள்

### வவுனியாவில் பெற்றோர் போராட்டம்

வவுனியா ஸ்ரீராமபுரம் திரு ஞானசம்பந்தர் வித்தியால யத்துக்கு ஆளுமைமிக்க அதிபர் ஒருவரை நியமிக் குமாறு கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"பாடசாலையில் கடமை யில் இருந்த அதிபர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் இடமாற்றலாகிச் சென்ற நிலையில் தற்போது புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார். குறித்த அதிபர் 35 மாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒன்றையே நிர்வகித்துள்ளார். எமது பாட சாலையில் 480க்கும் மேற் பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். எனவே எமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி ஆளுமைமிக்க அதி பர் ஒருவரை நியமியுங்கள்" என்ற கோரிக்கையை முன் வைத்தே பெற்றோர் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-110)

## அதிபர் விவகாரத்தில் அரசியல் தலையீடு

### அபிவிருத்திச் சங்கம் குற்றச்சாட்டு

வவுனியா,ஜன.29

பாடசாலை அதிபர் விவகாரத்தில் அரசியல்வாதி ஒருவர் தலையிடுகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவர் நியமிக் கப்பட்டுள்ள நிலையில், அவர் நிர்வாகத் திறனற்றவர் என்று தெரிவித்து பெற்றோர் சமூகத்தால் நேற்று ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சங்கச் செயலாளர் வ. சற்குணவதி தெரிவிக்கையில்,

நாம் இன்று (நேற்று) போராட்டம் மேற்கொள்ளவிருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் அலுவலகத்தில் இருந்து கதைப்பதாக எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அழைப்பை ஏற்படுத்தியவர் ஆர்ப்பாட்டத்தை உடனடியாக நிறுத்துமாறும், இல்லாவிடில் இதற்கான பின்விளைவுகளை சிலநாள்களில் அனுபவிப்பீர்கள் என்றும் அச்சுறுத்தியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் இதில் தலையிடுகின்றாரா என்று எமக்கு உறுதியாகத்தெரியாது. ஆனால் அவரது அலுவலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தமையால் எமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே இனிமேல் எனக்கோ அல்லது எனது குடும்பத்துக்கோ ஏதும் நடந்தாலும் அவரே பொறுப்புக்கூற வேண்டும்- என்றார். (ஒ-4.110)

## பல்லவராயனுக்கு சிலை நேற்று அடிக்கல் நடுகை

கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி, பூநகரி பல்லவராயன்கட்டுச் சந்தியில் பல்லவராயன் மன்னனின் சிலை அமைப்பதற்கான தளத்துக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இந்தச் சிலை அமைக்கப்படவுள்ளது.

பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி மற்றும் பாலாவி ஆகிய கிராமங்களை இணைக்கும் ஏ-32 வீதிச் சந்தியில் பல்லவராயன் மன்னனின் சிலையை அமைப்பதற்கான தளத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த பல்லவராயன் கட்டு கிராமத்தின் பெயரையும் பண்பாட்டு விழுமியங்களையும் இளம் சந்ததியினருக்கு நினைவுபடுத்தும் முகமாக இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பூநகரி பிரதேசசபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் மற்றும் பிரதேசசபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-13)







தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் தாமதமாக வழங்கப்பட்டமை மற்றும் கடினமான கேள்விகள் இடம்பெற்றமை என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து திஸ்ஸமஹாராகம ஜனாதிபதி கல்லூரி மாணவர்களின் பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-4இ)

### கொக்கட்டிச்சோலையில்

# இராணுவத்தால் கொல்லப்பட்டோருக்கு இடையூறுகளுக்கு மத்தியில் அஞ்சலி

மட்டக்களப்பு, ஜன. 29

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் 150 பேரின் நினைவுநாள் கொக்கட்டிச்சோலையில் பெரும் இடையூறுகளுக்கு மத்தியில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

புலனாய்வாளர்கள், பொலிஸார் என்று பாதுகாப்புத் தரப்பினரின் நெருக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி, கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் பணி புரிந்தவர்கள், இடம்பெயர்ந்து தங்கியிருந்த பொதுமக்கள் என 150 பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை 2006ஆம் ஆண்டு இராணுவம் இடித்தழித்திருந்தது.

அதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரத்தால் மீள மைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய நினைவேந்தல் நிகழ்வுக்கு கடும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

அதனையும் மீறி, நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், ரெலோ உபதலைவர் நி.இந்திரகுமார், நிதிச் செயலர் ந.விந்தன் கனகரட்ணம் ஆகியோர் நினைவுத்தூபியில் நேற்றுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் தடையை தவிர்க்க முடியாது

கொழும்பு,ஜன.29

**நாட்டில் மின்வெட்டைத் தவிர்க்க முடியாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு எரிபொருளை மூன்று நாள்கள், வாராந்த அடிப்படையில் வழங்குகின்றது. என்ன செய்தாலும் நாடு முழுவதும் இருளில் மூழ்குவதற்கு நிச்சயம் சந்தர்ப்பம் ஏற்படும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு ரீலோடிங் முறையில் எரிபொருளை வழங்குகின்றது என்று அதன் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலத் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## மன்னாரைக் காப்பாற்ற மக்களுக்கு விழிப்புணர்வு

மன்னார்,ஜன.29

மன்னார் தீவானது கனியவள மண் அகழ்வு மற்றும் மின்வலு உற்பத்திக்கான காற்றாலைகள் அமைப்பதற்கான நிகழ்ச்சி திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் இந்தத் தீவு கடலுக்கு இரையாகுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதனால் "மக்களே விழித்தெழுவோம், ஒன்றிணைவோம். மன்னார் மாவட்டத்தைப் பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில் பொது இடங்களில் பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளதுடன், மக்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கனியவளம் என்ற பெயரில் மன்னார் தீவைக் கடலுக்குள் அமிழ்த்தும் திட்டத்தை வன்மையாகக் கண்டித்து எதிர்ப்போம். ஒரு பிடி மண்ணையேனும் மன்னார் தீவிலிருந்து எடுத்துச் செல்ல அனுமதியோம். எமது மண்ணைப் பாதுகாப்போம். கனியவள மண் எமக்கு வேண்டும்.

அதேபோன்று மன்னார் நடுக்குடாவினுள் 36 தூண்கள் பொருத்தப்பட்டுள்ள உயர் மின்வலு உற்பத்திக் காற்றாடிகளால், மீன் வளம் அழியப்போகின்றது. எமக்கு அபிவிருத்தி வேண்டும். ஆனால் காற்றாடி வேண்டாம். மக்கள் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் உயர் மின்வலுக் காற்றாடிகள் அமைப்பதை உடனடியாக நிறுத்துவதற்கு ஒன்றிணைவோம். எமது மக்களின் எதிர்காலச் சந்ததி வாழ வழிசமைப்போம்.

அதேபோன்று மன்னார் தொடங்கி தலைமன்னார் வரை ஏ14 வீதி அபிவிருத்தி கண்துடைப்பு நாடகம். அபிவிருத்தி வேண்டும். ஆனால் அரை குறை வேலைத்திட்டம் வேண்டாம்.

எண்ணெய் அகழ்வால் அழியப்போகும் எமது வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க ஒன்றிணைவோம். எமது மண்ணில் வாழும் குடும்பங்கள் நட்டாற்றில் நில்லாதபடி பாதுகாப்போம்.

போதைப் பொருள் கடத்தல் பாவனையால், எமது மாணவச் சமூகம் உட்பட எதிர்கால இளையோர் அழிவுப்பாதையில் செல்லுகின்றனர். ஒட்டுமொத்தமாக எமது சமூகம் இறப்பின் விளிம்பில் தள்ளப்படுகின்றது. ஆகவே மன்னார் மக்களே இவ் விடயங்களில் விழிப்புணர்வுடன் செயற்படுங்கள்" என்று துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-4-60)

## பரீட்சை அனுமதி மறுக்கப்பட்ட மாணவி

முல்லைத்தீவு,ஜன.29

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிலுள்ள பாடசாலை ஒன்றில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத்தோற்ற மாணவி ஒருவருக்கு தோற்ற பாடசாலை நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவி பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதைக் காரணமாகக் கூறி, பாடசாலை நிர்வாகம் அவரை பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கவில்லை.

பாடசாலையில் வகுப்புகள் நடைபெற்ற போது, பெற்றோரை பாடசாலை நிர்வாகம் அழைத்திருந்தது. அங்கு பெற்றோர் சென்றிருந்த போது, அவர்களுடைய மகளுக்கு தனியான மேசை ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பெற்றோர் வகுப்பாசிரியரிடமும், அதிபரிடமும் வினவினர். தங்கள் மகள் பாடங்களில் குறைந்த புள்ளி எடுக்கின்றார். அதனால் பரீட்சைக்கு தோற்ற முடியாது என்று அதிபர் பதிலளித்துள்ளார். எனினும் தமது மகளைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்குமாறு அவர்கள் அதிபரிடம் கோரினர். எனினும் மாணவி பரீட்சையில் தோற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படவில்லை. பரீட்சைக்குத் தோற்றாத மாணவி தற்போது உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார் என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர். (ஒ-4-13)

## சத்திர சிகிச்சைக்கூடம் ஏப்ரல் திறக்கப்படலாம்

சாவகச்சேரி,ஜன.29

சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள, சத்திர சிகிச்சைக்கூடம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் திறக்கப்படலாம் என்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு சுகாதார அமைச்சால் 2015 ஆம் ஆண்டு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, இரு கட்டங்களாக கட்டட வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. மின்தூக்கி மற்றும் சத்திரசிகிச்சைக்கூட உபகரணங்கள் சுகாதார திணைக்களத்தால் வழங்கப்படாத நிலையில் கட்டடம் திறக்கப்படவில்லை.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக, கடந்த வருடம் மின்தூக்கி பொருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, அண்மையில் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கூடத்துக்கான மருத்துவ உபகரணங்கள் கழகத்தால், புலம்பெயர் நாடுகளில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. உபகரணங்கள் மார்ச் மாதமளவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சத்திரசிகிச்சைக்கூடம் நீண்டகால இழுபறிக்குப் பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தமுறை கொரோனாப் பயம் இருந்தாலும் நல்லபடியா வர்த்தகக் கண்காட்சி நடந்து முடிஞ்சிட்டுது. அங்க நடந்த ஒரு சம்பவத்தை இஞ்ச சொல் லியே ஆகோனும். உள்ளூரில இருக்கிற உற்பத்தியாளர்களோட, கொழும்பில இருக்கிற பெரிய பெரிய கொம்பனியள் எல்லாம் வந்து காட்சியறை போட்டு, தங்கட பொருள்களை விக்கவும் செய்தவை. சில கொம்பனியள் தங்கட விளம்பரத்தை கொஞ்சம் வித்தியாசமா செய்தவை. ஒருசில பிஸ்கட் கொம்ப னியள், கண்காட்சியைப் பார்க்க வாற ஆக்களுக்கு ஒரு தட்டில பிஸ்கட்டை கொண்டு போய் 'ப்ரீயா' குடுத்திச்சினம். இன்னும் சில கொம்பனியள் வழக்க மான விலையை விட 10 வீதம், 15 வீதம் எண்டு விலையைக் குறைச்சு குடுத்தினம். இப்ப இருக்கிற விலைவாசியில எது விலை குறைஞ்சாலும் சனத்துக்கு நல்லம் தானே. அதால இப்பிடி கண் காட்சியில தள்ளுபடி விலையில கிடைச்ச சாமான்களை சனங்கள் அள்ளிக் கொண்டு போச்சினம்.

இதேபாணியில பேமஸான குளிர்பானக் கொம்பனி ஒண்டும் கடை விரிச்சது. இயற்கையான பழச்சாறுகளை விக்கிற அந்தக்கொம்பனியின்ர பொருள்கள் கடையில கடும்விலை. ஆனால் கண்காட்சியில வழக்கமான விலையை விட அரைவாசிக்கும் குறைவா கிட்டத்தட்ட 55 வீத டிஸ்கவுண்டோட தன்ர பழச்சாறுகளை வாங்கலாம் எண்டு பெரிசா எழுதி வைக்க, கூட்டம் அள்ளத் தொடங்கிட்டு. சாதாரணமா கடையில அந்தக் கொம்பனியின்ர ஒரு போத்தல் பழச்சாறை வாங்கவே, காசைப் பற்றி யோசிக்கிற எங்கட சனங்கள், இப்பிடி குப்பைமலிவில கிடைச்சதால, ஆளுக்கு நாலைஞ்சு போத்தல் எண்டு பழச்சாறுகளை வாங்கிக் கொண்டு போச்சினம்.

'என்னதான் கண்காட்சிக்கு டிஸ்கவுண்ட் குடுக்கிற தெண்டாலும், இப்பிடி அரைவாசி விலைக்கு குடுத்தால் கட்டுபடியாகுமோ?' எண்டு அங்க நிண்ட ஒருசிலருக்கு சந்தேகம் வர, அவை போய் அண்ணை ஒருக்கா உந்த ஜூஸ் போத்திலை தாங்கோ, விலை ஒருக்கா பாக்க வேணும் எண்டு கேட்டிருக்கினம். அந்த ஸ்டோரில நிண்டவரும் ஒரு போத்திலைத் தூக்கி நீட்டியிருக்கிறார். இவை அந்தப் போத்திலை வாங்கி, விலையை ஒருக்காப் பார்த்திட்டு, எப்ப காலாவதித் திகதி எண்டு பார்த்தால், அது இந்த மாசத்தோட முடியுது எண்டு போட்டிருக்குது. உடனேயே அந்தக் கொம்பனிக்காரரிட்ட இப்பிடிக் கிட்டடியில முடிவுத்திகதி இருக்கிற ஜூஸை விக்கிறது சரியோ? எண்டு கேட்க, அதுக்கு அவை நாங்கள் ஏமாத்தி விக்கேலையே. முடிவுத்திகதி இன்னும் ஒரு கிழமை இருக்குத்தானே. விரும்பினவை வாங்கலாம், வேண்டாதவை போகலாம் எண்டு சொல்லிச்சினம். அதுக்குப் பிறகு என்னத்தைக் கதைக்க? இவை பேசாமல் திரும்பி வந்திட்டினம். ஆனால் இப்பிடி இவை கேட்டதைப் பார்த்த பிறகும் கனபேர் ஆளாளுக்கு நாலைஞ்சு போத்தல் பழச்சாறு வாங்கிக் கொண்டு போறது மட்டும் நிக்கேலை.

ஒரு வகையில் அந்தக் கொம்பனிக்காரர் கேட்டதும் பிழை இல்லைத்தான். கொம்பனிக்காரர் எப்பிடியாவது தங்கட பொருளை காலாவதித் திகதி முடியமுதல் வித்துமுடிக்கத்தான் பாப்பினம். வாங்கிற நாங்கள் தான் அந்தத் திகதிக்குள்ள வாங்கிற சாமானை பாவிச்சு முடிப்பமோ இல்லையோ எண்டு முடிவெடுக்க வேணும். ஒருநாளைக்கு ஒரு போத்தல் ஜூஸையும் கரைச்சுக் குடிக்க முடியாது தானே. அப்பிடியெண்டால் ஒரு கிழமையில டேட் முடியிற பழச்சாறில நாலைஞ்சு போத்தலை வாங்கினவை, அந்தக் காலத்துக்குள்ள பாவிச்சு முடிச்சிருப்பினமோ எண்டதுதான் இப்ப பட்சிக்குள்ள கேள்வி.



- பட்சி

## சைக்கிள் திருட்டு: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன.29

மானிப்பாயிலுள்ள தேவாலயத்தில் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேவாலயத்துக்குச் சென்ற பெண்ணொருவரின் துவிச்சக்கரவண்டியே திருடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். அதனடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-4-23)

# காய்ச்சல் ஏற்பட்டால் அலட்சியம் வேண்டாம்

### சுகாதாரத் தரப்பு ஆலோசனை

**யாழ்ப்பாணம்,ஜன.29**

**தென்மராட்சிப் பிரதேச மக்கள் தமக்கு காய்ச்சல் அறிகுறிகள் தென்படின், உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.**

உசன், கொடிகாமம் தெற்கு, மிருசுவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்குத் தொற்றாளர்களும், மிருசுவில் வடக்கில் உண்ணிக் காய்ச்சல் தொற்றாளரும், எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கில் கொரோனாத் தொற்றாளர்களும் அண்மைய நாள்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தாமதித்த பரிசோதனையால், ஒருவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளார். தற்போது பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பித்திருப்பதால், எலிக்காய்ச்சல் பரவும் வாய்ப்புகள் உள்ளன.

எனவே காய்ச்சல் ஏற்படின் அலட்சியம் கொள்ளாமல் 24 மணித்தியாலங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ளுங்கள்.

கொரோனாவைத் தடுக்க தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுங்கள். சுற்றாடலைச் சுத்தமாகப் பேணுவதுடன் நுளம்புக் கடியில் இருந்தும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். கால்களில் பித்த வெடிப்பு, கீறல் காயங்கள் உள்ளவர்கள் வயலில் தேங்கியுள்ள நீரில் இறங்காதீர்கள். குடிதண்ணீரை வீட்டில் இருந்து கொண்டு சென்று அருந்துங்கள். உடலை மூடி பாதுகாப்பான ஆடைகளை அணிந்து செல்லுங்கள். தனிநபர் சுகாதாரத்தை உயர்வாகப் பேணுவதன் ஊடாகவும், உண்ணிக் காய்ச்சலில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். (ஒ-4-159)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 29

ரூம் ரு ரீட் ஸ்ரீலங்கா ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில், சிறுவர்களுக்கான நூல் ஒன்றை வெளியிடுவதற்குப் பொருத்தமான கதைப் பிரதிகளை வழங்கும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எழுத்தாளர்கள் விண்ணப்பங்களை, storyta@roomtoread.onmicrossoft.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பின்னர் ஸ்தாபனத்திடம் இருந்து படிவம் ஒன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். படிவத்தின் ஊடாக எத்தனை கதைகளையும் ஒருவர் சமர்ப்பிக்கலாம்.

கதைகளை அனுப்புவதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் 7 ஆம் திகதி வரையாகும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரத்தில், 0766911 715 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

மேலும், தெரிவு செய்யப்படுகின்ற எழுத்தாளர்களுக்கு துறை சார்ந்த வழிகாட்டல் பயிற்சிகளையும் ஸ்தாபனம் வழங்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

(ஒ-ரி1)



## கிளிநொச்சி நீதிமன்றில் புதிய கட்டடம் திறப்பு

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியில், நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய மூன்று நீதிமன்றங்கள் தனித்தனியாக ஒரே வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

3 மாடிகள் கொண்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியே திறக்கப்பட்டுள்ளது.

.(ஒ-4-214)

## மேற்பார்வையாளர் மீது நடவடிக்கை தாமதம்

### தொழிலாளர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட சந்தையில் பணியாற்றும் மேற்பார்வையாளர் மீது இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஆ.ஜோன்ஸன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்பார்வையாளர் ஒருவர் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களிடம் தரக்குறைவாக நடந்து கொள்வது தொடர்பாக, மாநகர ஆணையாளரிடம் முறையிட்டோம். ஆனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக சம்பந்தப்பட்ட மேற்பார்வையாளர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். சுகாதாரத் தொழிலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற இடமளிக்க வேண்டும்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்காவிடில், விரைவில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்போம் -என்றார். (ஒ-4-இ)

## உணவகங்களில் சீர்கேடெனில் உடனடியாக முறையிடுங்கள்

### கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் கண்டறியப்படும் பட்சத்தில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுக்காவிடில், எம்மிடம் முறைப்பாடு செய்யமுடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் சமச்சீரான முறையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு அவர் பதிலளிக்கையில்,

இதுவரை எமக்கு அவ்வாறான எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. உணவகங்களில் முறையான சுத்தம் பேணாத பட்சத்தில், அதற்குப் பொறுப்பானவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுவிடில், முறைப்பாடுகளை எம்மிடம் தெரிவிக்கலாம். அதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் -என்றார்.

(ஒ-4-125)

## அரசியலில் இனி ஈடுபடமாட்டேன்

### அத்துரலியே ரத்னதேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

எதிர்காலத்தில் மீண்டும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் தேர்தலில் போட்டியிடாது ஆன்மிகப் பணிகளில் ஈடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

எமது மக்கள் சக்தி கட்சியின் கீழ் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அத்துரலியே ரதன தேரர், தேசியப் பட்டியல் மூலமாக இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கொழும்பில் நாளாந்தம் 35 தொற்றாளர்கள் பதிவு

கொழும்பு, ஜன. 29

கொழும்பு நகரில் நாளாந்தம் சுமார் 35 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர் என கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி மருத்துவர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த மாதத்தில் இதுவரை 14 கொரோனா இறப்புகள் பதிவாகியுள்ளன. தடுப்பூசியின் ஒரு டோஸ் கூட பெற்றுக்கொள்ளாதவர்களும் ஒரு சிலர் இரண்டு டோஸ் எடுத்தவர்களும் இறப்புக்களில் அடங்குகின்றனர்.

மேலும் சர்வதேசப் பாடசாலைகளில் 92 வீதமான மாணவர்களுக்கும், அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் 50வீதமான மாணவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 13 ரயில் நிலையங்களை புனரமைக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜன.29

நாட்டில் பிரதான 13 ரயில் நிலையங்களைப் புனரமைக்க இலங்கை ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இந்தத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு கோட்டை, மருதானை மற்றும் ராகம ரயில் நிலையங்கள் உட்பட 13 ரயில் நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளன என இலங்கை ரயில் பொது முகாமையாளரான தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார். கம்பஹா ரயில் நிலையத்தை புனரமைப்பதற்கான திட்டங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# துருக்கி அமைச்சர் இலங்கை வருகை

கொழும்பு,ஜன.29

துருக்கி வெளிவிவகார அமைச்சர் மெவ்லுட் கவ்யூ ஷோக்லு உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

துருக்கி வெளிவிவகார அமைச்சருடன் 13 பேர் கொண்ட தூதுக்குழுவினர் நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் இலங்கைக்கான துருக்கித் தூதுவர் ஆகியோர் வரவேற்றனர். (ஒ-4-இ)



# தபால் சேவை விரைவில் டிஜிட்டல் மயமாகும்

## தபால் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

தபால் சேவையை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கைகள் அடுத்த சில மாதங்களுக்குள் முன்னெடுக்கப்படும் என தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தின் அஞ்சல் குறியீட்டு விவரக்கொத்து வெளியீட்டு விழா அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில், நாடளாவிய ரீதியில் 654 அஞ்சல் அலுவலகங்களும், 3,410 உப அஞ்சல் அலுவலகங்களும் காணப்படுகின்றன.

இந்த அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் கடிதப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுவதில்லை. சில அஞ்சல் அலுவலகங்கள் பொருள்களை மாத்திரமே பரிமாற்றம் செய்கின்றன. அஞ்சல் குறியீட்டு விவரக்கொத்து மூலம் முகவரிகளைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிரமங்களும் தவிர்க்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# நாட்டை மூட வாய்ப்பளிக்காது தடுப்பூசியைச் செலுத்துங்கள்

## மருத்துவ நிபுணர் ஆலோசனை

**கொழும்பு,ஜன.29**

**எதிர்காலத்தில் நாட்டை முடக்க வாய்ப்பளிக்காமல், அனைவரும் பொறுப்புடன் கெரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ள வேண்டும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். எந்த வகையான வைரஸ் பரவுகின்றது என்பது முக்கியம் அல்ல. மக்கள் ஆரோக்கியமாக இருப்பதுதான் முக்கியம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு காரணத்துக்காக நாடு மூடப்படும் பட்சத்தில், மாதச் சம்பளம் வாங்குபவர்கள் பெரும் சிக்கலைச் சந்திக்க நேரிடும். அத்தகைய சூழ்நிலைக்கு நாடு தள்ளப்படாமல் இருக்க, மக்கள் தடுப்பூசி டோஸ்களைமுழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



# இயந்திரங்கள் கையளிப்பு

வவுனியா, ஜன. 29

சேதனப் பசளை மற்றும் பீடைநாசினி உற்பத்தித் திட்டத்தின் கீழ், துகளாக்கும் 20 இயந்திரங்கள் பொது மக்களுக்கும், வவுனியா நகரசபை, சிங்கள பிரதேச சபை என்பவற்றுக்கு தலா ஒரு இயந்திரமும் ஏனைய இயந்திரங்கள் இளைஞர் விவசாய கழகங்களுக்கும் நேற்று வவுனியா பிரதி மாகாண விவசாயத்திணைக்களத்தில் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்துகொண்டு குறித்த இயந்திரங்களை பயனாளர்களுக்கு வழங்கினார். அத்துடன், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-ரி1-110)

# ரவி மீதான வழக்கு ஏப்.27 விசாரணை

கொழும்பு.ஜன.29

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 11 பேருக்கு எதிரான வழக்கின் சாட்சிய விசாரணைகளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி ஆரம்பிக்குமாறு, கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி ஏலத்தின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பில் சட்டமா அதிபரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.


வழக்கின் பிரதிவாதிகள் மீது முன்வைக்கப்பட்ட 22 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவிப்பதற்கு வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் காலங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றால் எடுத்துக்கொள்ளப்படும். வழக்கு விசாரணைகளுக்காக பிறிதொரு தினத்தை அறிவிக்குமாறு சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் நேற்று முன்தினம் மன்றில் கோரினார்.

அவரது கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள் குழாம், பிரதிவாதிகளுக்கு எதிராக மீதமுள்ள 11 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு விசாரணைகளை முன்னெடுக்குமாறு கட்டளை பிறப்பித்தது. (ஒ-4-இ)

# 72 அடி பள்ளத்தில் சரிந்தது பேருந்து

## ஒருவர் சாவு :9 பேர் காயம்



ஹற்றன்.ஜன.29

தனியார் பேருந்து வீதியை விட்டு விலகி 72 அடி பள்ளத்தில் உள்ள ஆற்றுக்குள் வீழ்ந்தது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 9 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து ஹற்றன் சலங்கந்தை வீதியின் பட்டல்கலப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்தவர்கள் டிக்கோயா கிளங்கன் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-இ)

# மருத்துவக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், வாராந்தம் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெற்றுவரும் மருத்துவக் கருத்தமர்வுகள், "யாவர்க்கும் நலம் " என்ற நிகழ்ச்சித் தொடரின் இந்த வாரக் கருத்தமர்வு இன்று " உடல் உள ஆளுமை வளர்ச்சிக்கான யோகா மற்றும் கராத்தே வழிகாட்டல்" என்ற தலைப்பில் பிரபல மருத்துவ நிபுணர்களால் கலந்துரையாடப்படவுள்ளது.

கருத்தமர்வில், சூம் செயலி இலக்கம் 89985282023 , கடவுச்சொல் 354485 என்பவற்றினூடாக கலந்து கொள்ளுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறிய ஒமிக்ரோன் ஆயுள் காலம் கணிப்பு

கொழும்பு, ஜன.29

**கொரோனா வைரஸின் உருமாறிய ஒமிக்ரோன் வைரஸ், தோலில் 21 மணித்தியாலங்களும், பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாள்களுக்கு அதிகமாகவும் உயிர்வாழும் -என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.**

இது தொடர்பாக ஜப்பானில் உள்ள கியோட்டா மாகாண மருத்துவ பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கவலைக்குரிய மாறுபாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ள உருமாறிய வைரஸ்களில், பிளாஸ்ரிக் பரப்பின் மீது அல்பா 191.3, காமா 59.3, பீட்டா 156.6, டெல்டா 114 மணித்தியாலங்களிலும் உயிர் வாழும்.

ஒமிக்ரோன் 191.3 மணித்தியாலங்களும் உயிர் வாழும்.

ஒமிக்ரோன் தோலில் 21 மணித்தியாலங்கள் உயிர் வாழ்கின்றபோது, அல்பா 19.6, பீட்டா 19.1, காமா 11, டெல்டா 16.8 மணித்தியாலங்களில் உயிர்வாழும்.

எனவே உலக சுகாதார நிறுவனத்தால் முன்மொழியப்பட்ட தற்போதைய தொற்றுக் கட்டுப்பாடு (அடிக்கடி கை கழுவுதல்) நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-இ)

## திருவிழாக்களில் பங்கேற்க பூஸ்டர் தடுப்பூசி கட்டாயம்

மன்னார், ஜன.29

பெரும் திருவிழாக்களில் பங்கேற்போர் கட்டாயம் பூஸ்டர் தடுப்பூசி பெற்றிருத்தல் வேண்டும் என மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் அறிவித்துள்ளார்.

மன்னாரில் தற்பொழுது பைசர் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கையிருப்பில் உள்ளன.

இதனால் முதலில் தடுப்பூசி பெற வருவோருக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-60)

## 5 மில்லியன் பேர் பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு, ஜன.29

நாட்டில் இதுவரை 5 மில்லியனுக்கும் அதிகமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எனவே இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இயலுமானவரை விரைவில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## வேகமெடுக்கும் டெங்குத் தொற்று

கொழும்பு, ஜன.29

நாட்டில் கொரோனாவுக்கு அடுத்தபடியாக டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

எனவே மக்கள் அவதானத்துடன் செயற்படுவதுடன், உரிய பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 ஆயிரத்து 896 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் ஷிலந்தி செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## எம்.பிக்கள் 43 பேருக்கு இதுவரை கொரோனா

கொழும்பு, ஜன.29

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 43 பேர் இதுவரை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வாரத்தில் மட்டும் சுமார் 10 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நாடாளுமன்றுக்குள் தொற்றுப் பரவுவதற்கான எந்த ஆதாரமும் இல்லை. தொற்றுக்குள்ளாகியவர்களில், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்று நாடாளுமன்றின் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



மன்னாரில்

## நீதி அமைச்சின் நடமாடும் சேவை

மன்னார், ஜன.29

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் 'நீதிக்கான அணுகல்' நடமாடும் சேவை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பல்வேறு திணைக்களங்கள் இதில் கலந்துகொள்ளும் என அறிவிக்கப்பட்ட போதும் காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, நீதி அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஆகியவை மாத்திரமே இடம்பெற்றன.

நடமாடும் சேவையைப் பெற்றுக்கொள்ள வந்தவர்கள் இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவிடம் சட்ட உதவி ஆலோசனைகளைப் பெற்றதுடன், காணாமற்போனோர் தொடர்பான அலுவலக பிரதிநிதிகளிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சென்று விவரங்களை பதிவு செய்துள்ளனர்.

நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் பிரதிநிதிகள், நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்கள அதிகாரிகள், மாவட்டச் செயலக பணியாளர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (வ-56)

கொரோனா

## நாளாந்தம் 2,000 பேர்

கொழும்பு, ஜன. 29

இலங்கையில் நாளாந்தம் சுமார் இரண்டாயிரம் பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

'இலங்கையில் தற்போது இனங்காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. சரியான தரவுகள் ஊடகங்களில் வெளியாகாவிட்டாலும் நாளாந்தம் 2 ஆயிரம் வரையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். நாளாந்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதையடுத்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நோயாளர்களால் மருத்துவமனைகள் நிரம்பியுள்ளன.

அதேபோன்று அநேகமான இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் நிரம்பியுள்ளன. பல இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் மீண்டும் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை எதிர்காலத்தில் சுகாதாரத்துறையினரால் சமாளிக்க முடியாத அளவுக்கு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கலாம். தற்போதுள்ள நிலைமை எதிர்காலத்தில் மேலும் தீவிரமடைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன -என்றார். (ம)



## கிளிநொச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஜன.29

நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளில் நீதி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவை கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நீதி அமைச்சர் அலி சப்ரி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு இதனை ஆரம்பித்து வைத்தனர். (வ-214)

வவுனியாவில்

## 36 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று

வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்கு கொரோனாத் தொற்று கடந்த புதன்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா கல்வியியற் கல்லூரி மாணவர்கள் இருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் பரிசோதனையில் இருவருக்கும் தொற்று உறுதியானது. இதையடுத்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 50 பேருக்கு எழுமாறாக துரித அன்டிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில், மேலும் 18 பேருக்கு தொற்று உறுதியானது. இதேவேளை வவுனியா பல்கலைக்கழகத்தில் கொரோனா அறிகுறிகள் தென்பட்ட மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் பரிசோதனையில் 16 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 20 பேருக்கும் வவுனியா பல்கலைக்கழகத்தில் 16 பேருக்குமாக 36 கொவிட் தொற்றுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. (வ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சேறுபூசல்கள் வேண்டாம்

ஒற்றுமைக்குத் தேவை பொதுஎதிரி என்பார்கள். எந்த விடயத்துக்கு இது பொருந்துகின்றதோ இல்லையோ, இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்புவதற்காக ஓரணியில் திரண்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தற்போது இது கனகச்சிதப் பொருத்தம்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நின்று இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்புகின்ற செயற்றிட்டம் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசல்புரசலாக ஆரம்பித்த போதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதனைக் கண்டித்தது - எதிர்த்தது. 13ஆவது திருத்தம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. இதை சம்பந்தன், மாவை, விக்னேஸ்வரன் என்று அனைவரும் வெளிப்படையாகவே ஏற்றுள்ளனர். இப்படியிருக்கையில் தற்போது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமரை வலியுறுத்துவதானது, தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13இனைத் திணிக்கும் செயல் என்பது முன்னணியின் எதிர்ப்பின் சாராம்சம். அந்த எதிர்ப்பிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது இந்த எதிர்ப்பை வழக்கமான அறிக்கைகளுடன் வெளிப்படுத்திவிட்டு அடங்கிவிடவில்லை. வீதிவீதியாக மக்களை தெளிவுபடுத்தும், 13 தொடர்பிலான தன்சார்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் மக்கள் சந்திப்புக்களை அந்தக் கட்சி நடத்தியது. ஆக, இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதிய தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஒரு வலுவான எதிரியாக - போட்டியாளராக - மாற்றுக் கருத்தியலை பாய்ச்சும் சக்தியாக முன்னணி மாறியது. முன்னணியின் இந்த பரப்புரை வீச்சு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை- கூட்டை இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பும் திட்டத்துக்கு அப்பாலும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது. இதற்காக முன்னணிக்கு முதலில் நன்றிசொல்லவேண்டும். கீரைக் கடைக்கும் எதிர்க் கடை வேண்டுமென்பது இதற்குத்தான். முன்னணி வெளிப்படுத்திய எதிர்ப்பும் நல்லதுக்குத்தான்.

ஆனால், இந்த விவகாரத்தில் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரு முனையில் நின்று சிந்திக்கவேண்டும். 'இந்தியாவின் தாளத்துக்கு ஆடுகின்றனர்' என்ற பொத்தம்பொதுவான குற்றச்சாட்டை முன்வைத்துக் கொண்டிருப்பது மட்டும் முன்னணியின் கடமையல்ல. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி இருக்கும் அதிகாரங்களைத் தக்கவைப்பதைத்தான் கோருகின்றோம். தவிர, 13ஆவது திருத்தத்தை தீர்வாக நாம் ஒரு போதும் கேட்கவில்லை. அப்படிக் கேட்கவும் போவதில்லை என்று ஆறு கட்சிகளின் கூட்டணி அழுத்தம் திருத்தமாக அறிவித்துவிட்டது. இப்படியிருக்கையில் இந்த அறிவிப்பின் பாலான நியாயத்தன்மையை அதிலிருக்கக்கூடிய சாதகத்தனங்களை தேடவேண்டிய பொறுப்பு முன்னணிக்கு இருக்கின்றது.

அதேபோல், 'கோத்தாபயவின் தாளத்துக்கு ஏற்ப முன்னணி ஆடுகின்றது' என்ற சேறுபூசல் குற்றச்சாட்டை தமிழ்க் கட்சிகளின் கூட்டணி, முன்னணிக்கு எதிராகச் சுமத்திவிட்டு கடந்துபோகவும் முடியாது. முன்னணி இதுவரை வலுவாக முன்வைக்கும் கருத்துக்கான மதிப்பை - கனதித்தன்மையை ஏனைய கட்சிகள் கொடுத்துத்தான் ஆகவேண்டும். இனியும் இலவச துரோகப் பட்டங்கள் வழங்குவதையும், இந்திய மற்றும் பேரினவாத சாயங்கள் பூசுவதையும் கைவிட்டு பரஸ்பர பேச்சு மற்றும் கலந்துரையாடல் என்ற நிலைக்கு அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் செல்ல வேண்டும். அதைத்தான் தமிழ் மக்கள் தம் தலைவர்களிடம் எதிர்பார்க்கின்றனரே தவிர மாறிமாறி ஒருவர் மீது ஒருவர் சேறுபூசுதல்களை அல்ல. (ஏ.ஜ)

## நாளொரு நல்வார்த்தை

"நேரத்தைத் தள்ளிப் போடாதே; தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்."

- ஷேக்ஸ்பியர்



# வெளிவாரிப் பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

**2021ஆம் ஆண்டுக்கான பட்டதாரி பயிலுநர் நியமனத்தில், ஏற்கனவே அரச சேவையில் இணைந்து வெளிவாரியாகப் பட்டம் பெற்றவர்கள் உள்வாங்கப்படவில்லை. இவர்கள் ஏற்கனவே அரச சேவையில் உள்ளதைக் காரணம் காட்டி இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இவர்கள் கீழுழைப்பு பட்டதாரிகளாகவே பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொடர்ந்து கடமையாற்றி வருகின்றனர். பலர் சிற்றூழியர்களாகவும், கடமையாற்றி வருகின்றனர்.

உள்ளூராட்சி மாகாண சேவைகள் அமைச்சு, நிலைமையை உணர்ந்து, பாதிக்கப்பட்ட பட்டதாரிகளுக்குத் தீர்வு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

# காலாவதியாகும் நிலையில் 3 மில்லியன் தடுப்பூசிகள்

கொழும்பு, ஜன.29

பயன்படுத்தப்படாத 3 மில்லியன் டோஸ் சினோபார்ம் தடுப்பூசிகள் காலாவதியாகும் நிலையில் உள்ளன என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜி. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

26 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளில் 23 மில்லியன் டோஸ்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவை காலாவதியான பின்னர் அகற்றப்படும் நிலையில் உள்ளன. இன்னமும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு அவற்றைச் செலுத்துமாறு நாங்கள் சுகாதார அமைச்சிடம் கேட்டுள்ளோம். குறிப்பிடத்தக்க அளவு பைஸர் தடுப்பூசிகளும் இன்னமும் செலுத்தப்படாத நிலையில் உள்ளன. இது மிகவும் கவலைக்குரிய விடயம்-என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# 60 வீதமான குடும்பங்கள் இலங்கையில் வறுமை

கொழும்பு,ஜன.29

இலங்கையில் குறைந்தது 60 வீதமான குடும்பங்கள் வறுமையில் உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் சராசரியாக 5 வீதம் முதல் 6 வீதம் வரை மாத்திரமே உயரும் பொருள்களின் விலை, கடந்த மாதங்களுக்குள் குறைந்தபட்சம் 14 வீதம் வரை அதிகரித்துள்ளது.

உணவைக் கூட வாங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. மக்கள் இன்று எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை பசி.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். சில குடும்பங்கள் சிரமத்துடன், ஒரு நாளைக்கு ஒரு வேளை மாத்திரமே உண்ண முடிகின்றது. நெடுஞ்சாலைகள் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு இடையே, அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். தேவையற்ற அபிவிருத்திகளை ஒத்திவைத்து. பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் - என்றார். (ஒ-4-இ)

நாளை

30.01.2022 ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம் : 09.36 - 11.06

ராகுகாலம் : 05.06 - 06.36

தை 17 மகாத்மாகாந்தி நினைவு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்:03.11.1938 மறைவு:26.01.2022

## வேலாயுதம் சதாசிவம்

மண்கும்பானை பிறப்பிடமாகவும், ஆலங்கேணி பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் சதாசிவம் அவர்கள் 26.01.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் பாக்கியம், தம்பதியரின் அன்பு மகனும், முத்துக்குமார் ராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு கணவரும், லோகேஸ்வரன் (அமரர்), சறோசா தேவி (பூநகரி), கிருபாகரன் (மண்கும்பான்), அழகராணி (பூநகரி), சூரியகலா (பூநகரி), தயாபரன் (லண்டன்), சசிகலா (ஜேர்மனி), கோபிநாத் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகனராசா, தாரணி, சிவகுமார், நந்தகுமார் தர்மிளா (லண்டன்), வினோத் (ஜேர்மனி), ஆகியோரின் மாமனாரும், சரஸ்வதி, பூவதி (அமரர்), அருளம்மா (பிரான்ஸ்) ஞானரத்தினம் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவமலர், துரைசிங்கம் ஆகியேரின் பாசமிகு மைத்துனனும் நிருசன், நிசாந்தன், கவிசனா, யதுர்சனா, டுலக்ஷி, நிதர்சன், சிலக்ஷன், நிசான், சகானா, டிசானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொள்ளுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

ஆலங்கேணி,
பூநகரி.

தகவல்:
குடும்பத்தினர்.



# நற்பலன்களைத் தரும் சனிப்பிரதோஷ விரதம்

இராசையா ஸ்ரீதரன்



இன்று சனிப்பிரதோஷ விரதத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளாம் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் புனித புண்ணிய விரதம் பிரதோஷமாகும். அதிலும் இன்று கூடுகின்ற சனிப் பிரதோஷ விரதம் தனித்துவமான பெருமைமிக்க விரதமாகும்.

பிரதோச காலம் என்பது சுக்கிபட்சம், கிருஷ்ணபட்சம் என்கின்ற இரண்டு பட்சத்தும் வருகின்ற திரயோதசி. அதாவது பதின்மூன்றாம் திதியிலே சூரிய அஸ்தமனத்துக்கு முன்னே மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றே முக்கால் நாழிகையுமாக உள்ள புண்ணிய காலமேயாகம்.

இந்த விரதத்தை அனுஷ்டித்தால் வறுமை, கடன்தொல்லை, நோய், பயம், கிலேசம், வேதனை, தீய கனவு, பாவம் எனும் இவையனைத்தும் அறவே நீங்கிவிடும்.

எம்மில் பலபேருக்கு பிரதோஷ வழிபாடு பற்றி சரியாகத் தெரியாது. முதலில் விநாயகப் பெருமானை மும்முறை சிரசிலே குட்டி, வணங்கிக் கொள்ள வேண்டும்.

பிறகு இடபதேவரை வணங்கி, அங்கிருந்து இடப்பக்கமாகச் சென்று, சண்டேஸ்வரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பி வந்து, மீண்டும் இடபதேவரை வணங்கி, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகியைக் கடக்காமல் முன் சென்ற வழியே திரும்பி வந்து, பின்பு இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கித் தியானிக்க வேண்டும்.

அதன்பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இடபதேவ[illegible] பக்கமாக[illegible] அணுகி, பின்பு அங்கிருந்து திரும்பி வந்து இடபதேவரை வணங்காமல் இடப்பக்கமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து, திரும்பி வந்து இடபதேவரை வணங்கிப் பின்பு சிவலிங்கமாக அருள் மழைபொழியும் சிவபெருமானை வழிபாடியற்ற வேண்டும். இவ்வாறு சென்று வழிபடும் பிரதோஷ வழிபாட்டை நம்முன்னோர் சோமசூத்திரப் பிரதட்சணம் என்று கூறுவர்.

இன்றைய சனிப்பிரதோஷ விரத நாளில் சிவபுராணம், கோளறு பதிகம், பொற்கிழி பெற்ற பதிகம், இடர்களை [illegible] ஆகியவற்றை பாராயணம் செய்வது உத்தம பலனைத் தரும்.

பிரதோஷ விரதம் அனுஷ்டிப்பவர்கள் எக்காரணங் கொண்டும் பொய் பேசக் கூடாது. தண்ணீரும் பருகாமல் சிவசிந்தனை யோடு இருக்க வேண்டும். மாலை 6 மணிக்குப் பின்பு இன்னுமொரு பக்தருக்கு உணவளித்துத் தானும் சாப்பிட வேண்டும். சாப்பிட முன் குத்துவிளக் கேற்றி, அதற்குப் பூ வைத்து வணங்கி, ஒரு வாழை இலையிலே சமைத்த கறிகளை கொஞ்சம் கொஞ்சம் எடுத்து நன்றாகப் பிசைந்து காகத்துக்கு வைக்க வேண்டும். அது சாப்பிட்ட பின்னரே நாங்கள் சாப்பிடவேண்டும்.

இந்த விரதத்தை முறையாகப் பயபக்தியுடன் அனுஷ்டிக்காமல் விளையாட்டாகப் பிடித்தால் ஆயிரம் பிராமணரைக் கொன்ற பாவம் வந்து சேரும்.

*"சிவ சிவஎன்றிடத் தீ வினை அகலும்
சிவ சிவஎன்றிடச் சிவகதி தானே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCESS TO JUSTICE
நீதிக்கான அணுகல்
යුක්තියට ප්‍රවේශයක්

கிராமத்துக்குக் கிராமம், வீட்டுக்கு வீடு
நீதிமன்ற அபிமானத்துக்கு
வட மாகாண மக்களுக்கு நீதிக்கான அணுகல்

சனவரி 26 முதல் 30 வரை கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்கள் முழுவதிலும்

பங்கேற்கும் நிறுவனங்கள்
- சட்ட உதவி ஆணைக்குழு
- தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம்
- இழப்பீட்டுக்கான அலுவலகம்
- பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் தேசிய அதிகாரசபை
- கடன் நிவாரண சபைகள் திணைக்களம்
- சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்
- புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகம்
- மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
- சிறைச்சாலைகள் திணைக்களம்
- காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
- ஆட்பதிவுத் திணைக்களம்
- பதிவாளர் நாயகம் திணைக்களம்
- மாகாண காணிகள் திணைக்களம்
- பனை அபிவிருத்தி சபை
- சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு
- தொழில் பயிற்சி அதிகாரசபை

நீதி அமைச்சின் நடமாடும் சேவை
சனவரி 27 28 கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
சனவரி 29 30 யாழ் மத்திய மகா வித்தியாலயம்
மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00

- சட்ட தகராறுகளைத் தீர்ப்பதற்கான சட்ட ஆலோசனை
- நிலம் மற்றும் சொத்து தகராறுகள் தொடர்பான தீர்வுகள்
- மத்தியஸ்த செயல்முறை மற்றும் மாற்று தகராறு தீர்க்கும் முறைகளை அறிமுகப்படுத்தல்
- போதைப்பொருள் தடுப்பு, சட்டம் மற்றும் நல்லிணக்கம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்
- காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- சொத்து சேதங்களிற்கான இழப்பீடுகளை வழங்குதல்
- நல்லிணக்கம் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுடன் திறந்த உரையாடல்
- கிளிநொச்சி புதிய நீதிமன்ற வளாகம் மற்றும் மாங்குளம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு நீதிமன்ற கட்டிடங்களை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தல்
- தொழில் பயிற்சி வழிகாட்டுதல்கள்
- அடையாள அட்டைகள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்தல்

இந்த ஐந்து மாவட்டங்களுக்கும் உரித்தான வட மாகாண மக்களே, நீதி அமைச்சினை மையமாகக் கொண்ட மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து குறித்த விடயங்கள் சம்பந்தப்பட்ட உங்களின் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு உங்களிடம் வருகைதரும் இந்த விசேட சந்தர்ப்பத்தை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீதிக்கான பிரவேசம் (Access to Justice) நடமாடும் சேவையுடன் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள்

Web: moj.gov.lk Facebook: Ministry of Justice-Sri Lanka

අධිකරණ අමාත්‍යාංශය
நீதி அமைச்சு | Ministry of Justice


# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீண்ட நாளாக இருந்த மனஅழுத்தம் இன்று முற்றிலுமாக தீரும். பேச்சிலும் செயலிலும் கவனமாயிருந்தால் பிரச்சினையற்ற நாள். தொழில் மந்தமாக இருக்கும். எதிரிகளின் தொல்லை குறையும்.

**இடபம்:** குடும்பத்தின் செயல்கள் உற்சாகமூட்டும். கலகலப்பான நாள். பரபரப்பான நாள். நீங்கள் எதிர்பார்த்த வங்கிக்கடன் கிடைக்கும். உறவினரின் செயல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** அரச நன்மை உண்டாகும். நிதிக் கவலை நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். எதிர்பாராத பண வரவு வரும். தாய் மாமனால் நன்மை அதிகரிக்கும்.

**கடகம்:** உறவினர் வீட்டு விசேஷத்தில் பங்கேற்பீர்கள். மகிழ்ச்சி கூடும். முதலீடுகளைச் சிறிது குறைத்துக் கொள்ளுங்கள். குடும்பம் மகிழும். எதிர்பாராத யோகம் உண்டாகி சந்தோஷமளிக்கும்..

**சிம்மம்:** பணியிடத்தில் சகபணியாளர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். நண்பர்களுடன் நல்லுறவு நீடிக்கும். வாழ்க்கைத்துணை உதவுவார். மனத்தைரியம் கூடும். ஆர்வம் அதிகரிக்கும்.

**கன்னி:** போட்டிகளில் வெற்றியும் பரிசும் கிடைத்து மகிழ்விக்கும். நட்பு விஷயத்தில் கவனமாக இருக்கவும். முதலீடு அதிகமாகும். வாகன யோகம் உண்டாகும். உங்களின் முயற்சி வெல்லும்.

**துலாம்:** உறவினர்களுடன் நல்லுறவு நீடிக்கும். உற்சாகம் உயரும். தொழில், வியாபாரம் சிறப்படையும். மன சஞ்சலம் நீங்கும் பேச்சில் நிதானம் தேவை. பிறருடன் விட்டுக்கொடுத்து செல்லவும். சேமிப்பில் ஆர்வம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பணியிடத்தில் விரோதப் போக்கை கடைப்பிடிக்க வேண்டாம். இலாபம் அதிகரிக்கும். தாயாருக்கு எதிர்பாராத நன்மை வரும். உங்களது செயல்கள் சிறப்படையும். வீடு கட்டும் யோகம் வரும்.

**தனுசு:** நட்பு வட்டம் விரியும். வெளி மனிதர்களால் நலம் பெறுவீர்கள். குதூகலமான நாள். எதிர்பாராத பாராட்டும், பரிசும் கிடைக்கும். எதிர்பாராத பயணம் வரலாம். முயற்சியைத் தீவிரமாக்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**மகரம்:** சொத்து வாங்கும் முயற்சியில் கவனம் தேவை. குழந்தைகளின் செயல்களால் உற்சாகம் உண்டாகும். தந்தைக்கு அதிர்ஷ்டம் உண்டாகும். பயம் நீங்கும். உறவினர் சந்திப்பு உண்டு.

**கும்பம்:** உறவினர் சந்திப்பு உண்டு. நட்பு ரீதியாக உற்சாகமான நாள். எதிலும் மந்த நிலை இருப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். பழைய பிரச்சினை ஒன்றை முடிவுக்குக் கொண்டு வருவீர்கள்.

**மீனம்:** வீடு, நிலம் வாங்கும் எண்ணம் இன்று நிறைவேறும். உங்களது நகைகளை யாருக்கும் கடனாகக் கொடுக்க வேண்டாம். உணவு விஷயத்தில் கவனம் செலுத்துவீர்கள். வேலைப்பளு குறையும்.

# ஒமிக்ரோன் பற்றி புதிய கண்டுபிடிப்பு

ஒமிக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிருடன் இருக்கும் என்றும், பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாள்களுக்கும் மேல் உயிர்வாழும் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஒமிக்ரோன் வைரஸ் பற்றி ஜப்பானில் உள்ள கியோட்டா மாகாண மருத்துவ பல்கலைக்கழகம் ஒரு ஆய்வு நடத்தியது.

இதில் கொரோனா வைரஸ் பிளாஸ்ரிக் பரப்பின் மீது 56 மணிநேரமும் ஒமிக்ரோன் 191.3 மணி நேரமும் தோற்பகுதியில் 21 மணிநேரமும் டெல்டா 16.8 மணி நேரமும் உயிர்வாழும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

# பிரான்ஸுடனான நல்லுறவை வலுப்படுத்த மோடி உறுதி



புதுடில்லி, ஜன.29

ஐரோப்பிய நாடான பிரான்ஸுக்கும் இந்தியாவுக்கும் இடையே நிலவி வரும் நல்லுறவை மேலும் வலுப்படுத்த உறுதியேற்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்துக்காக பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன் பேஸ்புக்கில் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

அவருக்கு ருவிற்றர் வாயிலா[illegible] நன்றி தெரிவித்த பிரதமர் மோடி, "இந்தியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையேயான தனித்துவமி[illegible] பல்துறை [illegible]ந்த நல்லுறவை[illegible] ஒத்துழை[illegible]பயும் மேலும் வ[illegible] படுத்துவ[illegible] எதிர்நோக்கியிரு[illegible]றேன். இ[illegible]-பிரான்ஸ் நல்[illegible] நீண்ட கா[illegible]க்கு நீடிக்க வே[illegible]டும்" என[illegible]றிப்பிட்டுள்ளா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாகிஸ்தான் - லாகூரில் அண்மையில் இடம்பெற்ற 25வயதுக்குட்பட்ட 50-55கிலோகிராம்எடைப்பிரிவின் குத்துச்சண்டை இறுதிப் போட்டியில் தங்கப்பதக்கத்தைவென்று வடமாகாணத்துக்கு பெருமை சேர்த்த முல்லைத்தீவு வீராங்கனை கணேஸ் இந்துகாதேவிக்கு நியூ லலிதா நகைமாளிகை தங்கநகை ஒன்றினை பரிசாக வழங்கியதுடன் பணப் பரிசையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

மேலும் குறித்த போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற ஏனைய போட்டி யாளர்களுக்கும் நியூ லலிதா நகைமாளிகை பணப்பரிசில்களை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (ய)



நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி மூலமாக கடந்த வாரம் பூநகரி ஜெயபுரம் சிறீமுருகன் விளை யாட்டு கழகத்துக்கு மின் குமிழ்கள் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி. சிறிரஞ்சனால் வழங்கி வைக்கப்பட்டன. (ய-13)



சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாந்தை கிராம அலுவலர் பிரிவில் வாழும் 155 பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு சுவிஸ் தூண் சிறி சீரடி சாயி பாபா ஆலய அடியவர்களின் நிதியனுசரணையில் சில்லாலை சாந்தை அம்மன் ஆலய முன்றிலில் வழங்கி வைக் கப்பட்டது. (ய-125)





தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் நடைபெற்ற மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவத்தின் சில பதிவுகள் . (ய)


## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள சமையல் எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. அனுபவமுள்ள ஆய்வக வேதியியலாளர் - Lab Chemist
2. இயந்திர இயக்குனர் Machinery Operator
3. அனுபவமுள்ள Welders, Drivers
4. Labours

தொடர்புகளுக்கு :
vacancyjaffna24@gmail.com 077 355 3959




கிளிநொச்சி - பூநகரி வேரவில், வலைப்பாடு கிராமங்களில் பொருண்மியம் நலிந்த 50 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப் பட்டன. பூநகரி பிரதேசசபை யின் தவிசாளர் சி.சிறிரஞ் சன், பிரதேசசபையின் உறுப்பினர் த.ஜெயசித்திரா, புனித அன்னம்மாள் கடற் றொழிலாளர் சங்கத் தலைவர் பெனடிற், பாஸ்கரன் இம்மா னுவேல் ஆகியோர் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினர். (ய-ரி1,13)

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1949



மறைவு 26 . 01 . 2022

## அமரர் அந்தோனிப்பிள்ளை யோசப் மரியநாயகம்

(நாதன்) Mediquipment Regional Manager - Northen province

யாழ்ப்பாணம் - சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அந்தோனிப்பிள்ளை யோசப் மரியநாயகம் (நாதன்) அவர்கள் கடந்த (26.01.2022) அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளையின் அருமை மகனும், இந்திரக்குமாரியின் அன்புக் கணவரும், மைந்தன் இருதயதாஸ் இன் பாசமிகு தந்தையும், வானதியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அமிர்தநாதர் - கிறாசியாவின் மருமகனும், காலஞ்சென்ற றோசம்மா (பேபி), காலஞ்சென்ற Dr. நீக்கிலாஸ்பிள்ளை, காலஞ்சென்ற பற்றிமா புஸ்பம், காலஞ்சென்ற வில்லியம் யோண் மில்ரன், காலஞ்சென்ற வரதராஜன், நோயல் ரகுநாதன் (லண்டன்), யூஜின் வசந்தி (கனடா), ஆகியோரின் சகோதரனும், Dr. ஒலிவத் (லண்டன்), யோண் கருணானந்தன், ஞானம்மா, ஜடா (லண்டன்), ஆன் (லண்டன்), மோகன் (கனடா), பரதகுமார் (கனடா) தசரதகுமார் (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும், நீற்றா, வெலிசி, சுகி, பாமினி, விமோ, டக்ளஸ், கிறிசோலினி, றாயன், நிக்கொலா, ஜெயன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், நயோமி, மெகன் ஆகியோரின் அருமை மாமாவும், அனஸ் அஸ்வின், நயோவின், டிகாவின், டனி, டனியு, வியங்கா, கவின்கா, அன்ரனி றேடன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31.01.2022 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுக்கப்பட்டு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை புனித கதிரைமாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்
0777 259 749
077 614 4925



மல்லாவி அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில், பாடசாலை அதிபர் தங்கராசா நிமலன் தலைமையில் பொங்கல் பண்டிகை அண்மையில் கொண்டாடப்பட்டது. (ம-74)

வன்னி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், கொழும்பைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை விவேகானந்தனின் நிதியில், முல்லைத்தீவுதண்ணீரூற்று சீ.சீ பாடசாலையைச் சேர்ந்த 35 மாண வர்களுக்கு, கடந்த 24 ஆம் திகதி கற்றல் உப கரணங்கள் வழங்கப்பட்டன. (ரி1,13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இ.ச.பேரம்பலம் ESP

(வாரிவளவு காரைநகர்)

**திதி: துவாதசி (29.01.2022)**

வணிகத்துறையில் வழிகாட்டியாய் நின்று
எம் வாழ்வில் ஒளியேற்றிய அன்புத் தெய்வமே!
உங்கள் பொன்வதனமும், புன்சிரிப்பும்,
நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும்
எம் நெஞ்சங்களில் நீங்காது நிழலாடுகின்றன

தொழிலில் நேர்த்தியும், நேர்மையும், நன்மதிப்பும்
என்றும் அழியாச் சொத்தாய் விட்டுச் சென்றீர்கள்
நீங்கள் மறைந்து ஆண்டுகள் இருபத்தொன்பதானபோதும்
நீங்காது எம் நெஞ்சங்களில் நிலைபெற்று விட்டீர்கள்

உங்கள் ஆத்மா சாந்திபெற, எல்லாம் வல்ல
வாரிவளவு கற்பகவிநாயகர் பாதங்களைப்
பணிந்து பிரார்த்தித்து நிற்கிறோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


கல்விக்காருண்யன்
கலாநிதி லயன் E.S.P நாகரத்தினம் (PMJF)
குடும்பத்தினர்.

383, மணிஓசை
கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(cs.42460) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
18 . 04 . 1927



ஆண்டவன் அடியில்
08 . 02 . 2021

## அமரர்
## நமசிவாயம் பாலசிங்கம்

யாழ். கரவெட்டி வடக்கு ஞானியார் வளவு இரும்பு மதவடியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் பாலசிங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

(cs 42420 (2.6)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு
19 . 06 . 1958



உதிர்வு
28 . 01 . 2022

## யோகரட்ணம் இராஜேஸ்வரி

**வயது- 63**

யாழ். வேலம்பிராய் தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகரட்ணம் இராஜேஸ்வரி கடந்த (26.01.2022) புதன்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தெய்வநாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், யோகரட்ணம் (ஓய்வுபெற்ற C.T.B - உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், பால்ராஜ் (லண்டன்), பாலினி (சுவிஸ்), கமல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஜனி (லண்டன்), பதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், தரணி, ரிஷ்வியா, யாதவன் (சுவிஸ்), பகிரதன், பானுஜா, ராக்ஷிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அருளானந்தம், காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் புண்ணியமூர்த்தி, ராஜரட்ணம், உதயகுமார், அரசகுமாரி, கருணாநிதி, கருணாகரன் (ஜேர்மனி), தயாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நாகபூசணி, நல்லமுத்து, ரஜனி, கனகேஸ்வரி (குஞ்சு), கனகேஸ்வரி, கீதாஞ்சலி, ரவீந்திரன், அனுலா, நந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் வேலம்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 775 1793
077 954 6485

தகவல்:
குடும்பத்தினர்
ந.ரமேஸ் (பெறாமகன்)

(cs 42540) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 07 . 1945



இறப்பு
26 . 01 . 2022

## செல்லர் சிவசோதி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சிவசோதி கடந்த (26.01.2022) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான இளையப்பா (ஓய்வுபெற்ற ஆசிரி ர்) - தங்கப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கிருஷ்ணவேணியின் அன்புக் கடிவரும், கோசலா, ரோகணன், ஜெமிலா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற மதியழகன் மற்றும் பிரியதர்சினி, காலஞ் சென்ற ரூபகாந்தன் ஆகியோரின் மாமனாரும், அபிநயா, அபிமன்யு, நிகேதன், வர்ஷன் ஆகியோரின் பேரனும், சிவலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிர மணியம், சிவபாலசுந்தரம் மற்றும் சிவலட்சுமி, காலஞ்சென்றவர்களான சிவமலர், சிவமணி, மற்றும் சிவகுருநாதர், சிவநடராஜா ஆகியோரின் சகோதரனும், பவளராணி யின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். என்பதை அறியத்தரு கின்றோம்.

தொடர்பு:
077 5742 129
074 1021 981

தகவல்:
குடும்பத்தினர்

(cs 1213) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 11 . 1932



இறப்பு 19 . 01 . 2022

### திருமதி மகேஸ்வரி தங்கராசா

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தங்கராசா கடந்த (19.01.2022) புதன்கிழமை கொழும்பு வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் பத்தர் பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு ராசம்மா தம்பதிகளின் மருமகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும், ரஞ்சினி, சந்திராதேவி, ஸ்ரீராஜசிங்கம், ரோகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனபாலன், சிவானந்தம், சாமிலி, குகதாஸ் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தங்கராசாப் பத்தர் (உடுவில்) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, யோகரத்தினம், சித்திரவேல், ஜெயகசோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னுமணி ரத்தினம் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (20.01.2022) வியாழக்கிழமை வத்தளையில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 42547) (3/6)

---

## பதவி வெற்றிடம் - எழுதுநர்
### குறியீட்டு இலக்கம் 302/15
### விண்ணப்பங்கள் வெளிவாரியாக கோரப்படுகின்றது

**மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன (எரிபொருள் நிலைய எழுதுனர் -1, தலைமைக்காரியாலய எழுதுனர்-1)**

01. சம்பள அளவுத்திட்டம் : 302/15 15,545.00-130x10-140x10-18245.00 (அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

02. தகைமைகள் :
1. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 16 வது சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைவாக சம்பந்தப்பட்ட துறையிலான 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவு பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம்/ க.பொ.த சாதாரண தரத்தில இரு அமர்விற்கு மேற்படாமல் எண்கணிதம் / கணிதம், சிங்களம் தமிழ் பாசை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

03. வயது : 18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

04. பொது :
1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்த வேண்டும்.
2. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் **பொது முகாமையாளர் மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி உயிலங்குளம்** என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 15/02/2022 திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

**பொது முகாமையாளர்,**
**மாந்தை தெற்கு - ப.நோ.கூ.சங்கம். உயிலங்குளம்.**

(cr.37448) (2.6)

---

## நன்றி நவிலல்
### அமரர் ரத்தினவதனா அருட்செல்வம்

(ஓய்வுபெற்ற அசிரியை யாழ். பரி. யோவான் கல்லூரி)

தோற்றம் : 16.07.1955 மறைவு : 02.01.2022



எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி இரத்தினவதனா அருட்செல்வம் அவர்கள் நோயுற்ற வேளை சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார் மற்றும் ஏனைய ஊழியர்களிற்கும், பராமரிப்பிற்கு உதவியவர்களிற்கும், தேவைப்பட்ட உதவிகளை வழங்கியவர்களிற்கும், யாழ். பரி யோவான் கல்லூரி சமூகத்திற்கும் ஏனைய பாடசாலை சமூகத்திற்கும், இத்தகவல் அறிந்து நேரிலும், வெளியூர் உள்ளூரிலிருந்து தொலைபேசியின் ஊடாக ஆறுதல் கூறிய அனைவருக்கும், அன்னாரது இறுதி ஆராதனையில் கலந்து கொண்ட கிறிஸ்தவ மதகுருமார்கள் அயலவர்கள், உற்றார், உறவினர் நண்பர்கள், அனைவருக்கும் ஏனைய எல்லா வித ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும், கண்ணீர் அஞ்சலி மற்றும் மலர் வளையம், பதாகைகள் வழங்கி யோருக்கும்.

அன்னாரின் நிகழ்வில் பங்கெடுத்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

(CR 37451) (3.6)

குடும்பத்தினர்
077 612 5983

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 27 . 05 . 1967



விண்ணில் 21 . 01 . 2020

### அமரர் சிவஞானரத்தினம் செல்வக்குமாரன்

அன்பின் திருவுருவே! திதி -29.01.2022

எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டு இரண்டல்ல - ஈராயிரம்
ஆண்டுகள் ஆனாலும், கால ஓட்டம்
நிற்காமல் ஓடினும்.... நெஞ்சில் பதிந்த உமது
நினைவலைகள் என்றென்றும் நம்மை விட்டு நீங்காது...
அப்பாவைத் தொலைத்து விட்டோம் ஆனால்
அவர் நினைவுகளைத் தொலைக்கவில்லை

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

சூரிச்
சுவிற்சர்லாந்து

(CS 42470 (3.6)

மனைவி, பிள்ளைகள்

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 01 . 1971



இறப்பு 23 . 01 . 1922

### பாலசிங்கம் தர்மபாலன்

புங்குடுதீவு, 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் தர்மபாலன் கடந்த (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும், தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயராணியின் அன்புக்கணவரும் குகப்பிரியா, துஷாந் யதுர்சன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனபாலன், கிருபாராணி, கிருபாநந்தினி, கிருபாரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயராணி, ரவீந்திரன், விக்கினேஸ்வரன், இந்திராணி, விஜயகுமார், விஜிதா, காலஞ்சென்ற வசந்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆனந்தரூபன் யுவராஜா, கஜன், ஜெயராஜ், தேவயானி, வாசுகி, ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை ரொறன்டோ கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

73/2 (23) B.A.தம்பி லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனோன்மணி, பஞ்சாட்சரம்
குடும்பத்தினர்.

(CS 9761) 6

---

## மரண அறிவித்தல்
### பொன்னுத்துரை ஞானசேந்தன்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஞானசேந்தன் கடந்த (26.01.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை நவமணியின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை கனகமணியின் இளைய மருமகனும் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், ருகேஷசன், தர்ஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை சிவன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு

(CS 42517) (3/6)

தகவல் குடும்பத்தினர்
077 227 3774

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி அமைச்சுக்கு எதிராக முல்லைத்தீவில் போராட்டம்

கொட்டும் மழைக்குள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, ஜன. 29

நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான நீதி அமைச்சின் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மழையில் நனைந்தபடி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதி அமைச்சின் கீழுள்ள அனைத்துத் திணைக்களங்களும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 'நீதிக்கான அணுகல்' என்ற தலைப்பில் நடமாடும் சேவையை நேற்று நடத்தின.

இந்த நிலையில், 'காணாமல் போனோருக்கான அலுவலகம் கண்துடைப்பு நாடகம். காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிராகரிக்கிறோம்' என்று வலியுறுத்தி முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில், போராட்டம் மேற்கொண்டோரை சந்தித்த நீதி அமைச்சின் அலுவலக அதிகாரி ஒருவர், மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் நடமாடும் சேவை முகாமுக்கு வருகைதருமாறும் அமைச்சரோடு கலந்துரையாடுமாறும் அழைப்பு விடுத்தார்.

இதனை நிராகரித்த போராட்டகாரர்கள் எதிர்வரும் ஜெனீவா அமர்வை சமாளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த கண்துடைப்பு நடவடிக்கையில் எமக்கு நம்பிக்கை இல்லை. எமக்கு இழப்பீடோ இறப்புச் சான்றிதழோ தீர்வாகாது. குறைந்தபட்சம் இராணுவத்திடம் கையளித்தோருக்காவது என்ன நடந்தது என்ற பதிலையாவது இந்த அரசாங்கம் சொல்லவேண்டும் - என்று தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் அமர்வில் வெறும் நான்கு பேர் மாத்திரம் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்ததோடு, அதில் கலந்துகொண்டவர்களில் மூன்றுபேர் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இழப்பீடு எமக்கு வேண்டாம் எனவும் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற விசாரணையே வேண்டும் என நீதி அமைச்சரிடம் தெரிவித்தனர். (ம-19)




யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் 60 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை **(30.01.2022) ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலை "சுபாஸ் மருத்துவ சிகிச்சை"** பிரிவில் காலை 9.30 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பா.பாஸ்கரன்**
**செயலாளர்.**

**யாழ். சௌ.சே.கூ.சங்கம்.**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.18257) (2.6)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21 . 10 . 1930



மறைவு 26 . 01 . 2022

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமியார் ஆலயப் பங்காளரும் 3ஆம் திருவிழா உபயகாரரும், கோவில் திருப்பணிகளுக்குப் பொருளுதவியை வாரி வழங்குபவருமாகிய

### விஸ்வலிங்கம் சின்னத்தம்பி

(ஓவசியர் - விவசாய விரிவாக்க உத்தியோகஸ்த்தர்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் ஆத்மா கரமத்தை முருகனின் பாதங்களில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சு. நடராசலிங்கம்**
**3ஆம் திருவிழா உபயகாரர்கள்**
**கரமத்தை கந்தன் ஆலயம் - நெடுந்தீவு**

(CS 42538) (3/6)

## அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

முருகேசு நவரட்ணராஜா
23/1, சீனிவாசகம் றோட்,
கொட்டடி யாழ்ப்பாணம்.
தற்போது, 10 Turner Road, New Malden, Surrey KT3 5NL United Kingdom **தனது அற்றோணித்தத்துவக் காரன் சாட்குண்ணியமூர்த்தி கமலமூர்த்தி** மூலம் தோற்றம் 22/1C பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**- வழக்காளி**

**வழ. இல: காணி /268 / 2014 எதிர்**
**தேவதாசன் கலைத்தாசன்**
9, சீனிவாசகம் றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். **- எதிராளி**

**இத்தால் சகலருமறிய**

இவ் வழக்கில் பிணக்கிற்குரியதும் இல. 23/1 சீனிவாசகம் றோட், கொட்டடி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதும் "பள்ளு விலித்தோட்டம்" நிலப்பரப்பு ஒன்று குளி பத்து தசம் சைபர் ஆறு (நிபர 1 குளி 10.06) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம் தொடர்பில், குறித்த எதிராளிக்கெதிராக தொடரப்பட்ட இவ்வழக்கானது இந்த நீதிமன்றத்தில் இன்னமும் முடிவுறாது நடைபெற்று வருகின்றது என்று இத்தால் அறிவித்தல் தரப்படு கின்றது.

**2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி**

**வரைவு**
**வழக்காளியின் சட்டத்தரணி**

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

(cr. 18260) (2.6)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள Decon கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள கணிய அளவையியலாளர் (Q.S - Auto Cad தெரிந்தவர் விரும்பத்தக்கது) மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O), வர்ணம் பூசுபவர் (Painter), சாரதி (Driver)

தொடர்புக்கு: **077 777 0969** Email: jenoshanark@gmail.com

## அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

**01. பிரபாகரன் மார்க்கண்டு**
**02. பெண் கீதா மார்க்கண்டு**
இருவரும் 25, சீனிவாசகம் றோட், கொட்டடி யாழ்ப்பாணம்.
தற்போது
254 Highglen Avanue,
Markham, Ontario, L3S 3W4,
Canada.
தமது அற்றோணித்தத்துவக் காரன் சாட்குண்ணியமூர்த்தி கமலமூர்த்தி மூலம் தோற்றம் 22/1C பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**- வழக்காளிகள்**

**வழ.இல : காணி / 270 / 2014 எதிர்**
**தேவதாசன் கலைத்தாசன்**
9, சீனிவாசகம் றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். **- எதிராளி**

**இத்தால் சகலருமறிக,**

இவ்வழக்கில் பிணக்கிற்குரியதும் இல. 25 சீனிவாசகம் றோட் கொட்டடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதும் **"பள்ளுவிலித் தோட்டம்"** நிலப்பரப்பு ஒன்று குளி பத்து தசம் சைபர் ஆறு (நிபர 1 குளி 10.06) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம் தொடர்பில் குறித்த எதிராளிக்கெதிராக தொடரப்பட்ட இவ்வழக்கானது இந்த நீதிமன்றத்தில் இன்னமும் முடிவுறாது நடைபெற்று வருகின்றது என்று இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி**

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(CS 12261) (3.6)

## அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

**சுப்பிரமணியம் கெம்பெண் வாசுகி**
23/2, சீனிவாசகம் றோட்,
கொட்டடி யாழ்ப்பாணம்.
தற்போது
16, Calverley Road,
Stoneleigh, SurryKT 17
2NX United Kingdom
தனது அற்றோணித்தத்துவக் காரன் சாட்குண்ணியமூர்த்தி கமலமூர்த்தி மூலம் தோற்றம் 22/1C பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். **- வழக்காளி**

**வழ.இல : காணி / 269 / 2014 எதிர்**
**தேவதாசன் கலைத்தாசன்**
9, சீனிவாசகம் றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். **- எதிராளி**

**இத்தால் சகலருமறிக,**

இவ்வழக்கில் பிணக்கிற்குரியதும் இல. 23/2, சீனிவாசகம் றோட், கொட்டடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதும் **"பள்ளுவிலித் தோட்டம்"** நிலப்பரப்பு ஒன்று குளி பத்து தசம் சைபர் ஆறு (நிபர 1 குளி 10.06) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம் தொடர்பில் குறித்த எதிராளிக்கெதிராக தொடரப்பட்ட இவ்வழக்கானது இந்த நீதிமன்றத்தில் இன்னமும் முடிவுறாது நடைபெற்று வருகின்றது என்று இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி**

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(CS 12262) (3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம் சைவப் பரிபாலன சபையால் வருடந் தோறும் நடத்தப்படும் பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர் ஊடாகக் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படி இல.66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சைவப் பரிபாலன சபையின் செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

(ச-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தைமேனி பகுதியில் 18 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. 1 பரப்பின் விலை - 3.5 லட்சம் (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா). 15 அடி பாதையுடன் காபெட் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு

(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 KM தூரம்).

அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன்வீதி.

தொடர்பு:-**076 890 9259, 077 015 0353**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 6 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 KM தூரம்)

**077 65 85 999**


## மரண அறிவித்தல்

தோற்றம் 13.09.1942



மறைவு 27.01.2022

**கதிரவேலு தம்பித்துரை**

கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தம்பித்துரை அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.01.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார்வதி இல்லம்,
வீரபத்திர கோவில் வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 16289) 1-6

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்.

மண்ணில் 20 . 09 . 1934



விண்ணில் 30 . 12 . 2021

திதி - அபரபக்க துவாதசி

கடந்த 30.12.2021 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### சுப்பிரமணியம் கருணாகரன்

**(உரிமையாளர் மணியம் ஸ்ரோர்ஸ்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.01.2022) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதன் பின்னர் முற்பகல் 11.00 மணியளவில் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் அனைத்து நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு


எங்கள் குடும்பத் தலைமகன் எமக்கெல்லாம் வழிகாட்டியான எமது தந்தையார் அமரர் திரு.வே.சுப்பிரமணியம் கருணாகரன் அவர்கள் 30.12.2021 அன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்க வைத்து மீளாத் துயில் கொண்ட இடுங்கண்மிகு வேளையில், எம் துயரில் பங்கெடுத்த எங்கள் உறவுகள், அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் மலர் வளையம் வைத்தும், காட்சிப் பதாகைகள் வைத்தும் தொலைபேசி மின்னஞ்சல் வாயிலாகத் துக்கம் விசாரித்த சொந்தங்களுக்கும் மற்றும் இறப்பு வீட்டு நிகழ்வுகளை நேரடி ஒலிபரப்புச் செய்த சமூகம் ஊடகத்திற்கும் ஏனைய ஊடகப் பத்திரிகை நண்பர்களுக்கும் இன்றைய வீட்டுக் கிருத்தியக் கிரியைகளைச் சிறப்பாக நடத்திய அந்தணக் குருமாருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எம் மனம் நிறைந்த நன்றியறிதல்களை இருகரம் கூப்பி தெரிவித்துக் கொள்கின்றோம்.

கண்ணகி அம்மன் வீதி,
10ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

குடும்பத்தினர்.
077 716 8755, 077 894 5856

(CS 16268) 1-6

## மரண அறிவித்தல்



### வீரகத்திப்பிள்ளை இராமநாதன்

(கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பூர்வீக தர்மகர்த்தாவும் முன்னாள் தலைவரும்)

கிளிநொச்சி பழைய கமம் முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் புளியம் பொக்கணை நாகதம்பிரான் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை இராமநாதன் நேற்று முன்தினம் (27.01.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை ஐங்கரப்பிள்ளை, கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பூர்வீக தர்மகர்த்தாவும், பிரதம பூசகரும்) பரமேஸ்வரியின் (அருணாசலம் உடையாரின் மகள்) சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு (உடையார்) பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், நீலாம்பிகையின் அன்புக் கணவரும், யசோதா (லண்டன்), நிஸந்தா (புளியம்பொக்கணை), றேனுகா (பிரான்ஸ்), நிலாயினி (பெரியகுளம்), பிரியதர்சினி (புளியம்பொக்கனை) ஆகியோரின் அன்புத் தந்தையும் , கேதீஸ்வரன் (லண்டன்), சுபாஸ்கரன் (அவுஸ்திரேலியா), கோடீஸ்வரன் (பிரான்ஸ்), சிவஸ்ரீஅமிர்தஸ்ரீ ஸ்கந்தராஜா குருக்கள் (ஸ்ரீ ஐயா வன்னி பிராந்திய குருமார் ஒன்றியத் தலைவர்), இராகவன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலகிருஷ்ணன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), நாகேஸ்வரி (ஆசிரியர், கிளி/ பாரதி வித்தியாலயம்), காலஞ்சென்ற ரஞ்சித்குமார், தயதீஸ்வரன் (ஆவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம் (வறணி), சிவராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற துரைராசா, கமலாம்பிகை (லண்டன்), புஸ்பராசா (சுவிஸ்), ஜெயராசா (வறணி), ஆனந்தராசா (வறணி), உதயராசா (லண்டன்), மீனாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திலக்சன், பதுசனன், கவிஷனன், மதுமிசா, கிஷோர், தரணிகன், ஸ்ரீ பிரணவன், ஸ்ரீ வைஷ்ணவன், ஸ்ரீ அபிஸ்ணவன், ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் புளியம் பொக்கணை நெடுமோட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சகோதரி - 076 388 0125
மருமகன் - 077 959 0199

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 10 . 1955



மறைவு 28 . 01 . 2022

### திரு. கந்தையா சுந்தரலிங்கம்

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், இல.07, பிரதானவீதி, கூமாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் நேற்று (28.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (முன்னை நாள் வர்த்தகர், பாணந்துறை, தங்கொட்டுவ) இராசம்மா தம்பதியரின் புதல்வனும், காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அருணாசலம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற Dr. விஜயரட்ணம், சிவலிங்கம், கனகலிங்கம், கனகேஸ்வரி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சனா, கார்த்திகா, யமுனா, தயாநிதி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலரஞ்சன், சிவகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகௌரி, ஞானவதி, குணரட்ணம் (ஸ்ரீரங்கன் என்ரபிறைசஸ்), சாந்தி, தனபாக்கியம், யோகேஸ்வரன் (ஓய்வுபெற்ற வவுனியா, இலங்கை வங்கி பதில் முகாமையாளர்), சேனாதிராசன், வரதராசன் (ஓய்வுபெற்ற வவுனியா சித்தி விநாயகர் வித்தியாலய உப அதிபர்), தவராசன், சீதாலட்சுமி, லிங்கேஸ்வரன், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேந்திரம், சந்தராம்பாள், சற்குணமலர், பராசக்தி, விமலாதேவி, காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம், தர்சினி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.07,பிரதான வீதி,
கூமாங்குளம்,
வவுனியா.

தகவல்:குடும்பத்தினர்
கந்தையா சிவலிங்கம் (சகோதரன்)- 077 068 4254
சுந்தரலிங்கம் செந்தூரன் (மகன்)- 076 654 5053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமக்குத்...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு 6 தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து ஆவணம் ஒன்றை அனுப்பியிருந்தன. அந்த ஆவணத்தில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியிருந்தன. இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் மேற்கொள்ளப்படும் பரப்புரை தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் நகரிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மாவை. சோ.சேனாதிராசா,

இனத்தின் விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுசேர்ந்துள்ள சூழலில் அதனைக் குழப்பும் விதத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொய்ப்பரப்புரையை முன்னெடுக்கின்றது. நாம் இந்தியப் பிரதமருக்கான ஆவணத்தை கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் ஒப்படைத்தோம். 'இந்த ஆவணம் எனக்கு மட்டுமா வழங்கப்படுகின்றது அல்லது பகிரங்கப்படுத்தப்படுமா?' என்று அதன்போது எம்மிடம் அவர் கேட்டார். இந்த ஆவணம் அவருக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றது என்று பதிலளித்தோம். அதனால் ஆவணத்தை முழுமையாக இப்போதைய சூழலில் நாம் பகிரங்கப்படுத்த முடியாது.

ஆனாலும், அதிலுள்ள சில முக்கிய விடயங்களை நான் இங்கு பகிரங்கப்படுத்துகின்றேன். நாம் ஆவணத்தின் தலைப்பையே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தல் என்றுதான் குறிப்பிட்டுள்ளோம். ஆவணத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டோம் என்றோ, 13ஆவது திருத்தம்தான் எங்களின் தீர்வு என்றோ சொல்லவில்லை.

இந்தியப் பிரதமர் 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து நாடாளுமன்றில் உரையாற்றியபோது கூட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் சிந்திக்குமாறு கூறியிருந்தார். அவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அதையும் நினைவூட்டியுள்ளோம்.

உள்ளக சுயநிர்ணய உரித்தின் அடிப்படையில் எமது வரலாற்று வாழிடங்களில் நாம் சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பிலேயே குறிப்பிட்டுள்ளோம். இலங்கையின் புதிய அரசமைப்பில் எமது அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசமைப்பு அமையாவிடின், நாம் சர்வதேச சாசனங்களுக்கு அமைவாக வெளியக சுயநிர்ணய உரித்தை வலியுறுத்துவோம் என்பதையும் இலங்கை மற்றும் இந்திய அரசுகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் - என்றார். (ஒ-5,26)

## கோயபல்ஸின்...

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறுதான் நாங்கள் கோரியுள்ளோம். இருப்பதை நடைமுறைப்படுத்தக் கோருவதில் என்ன தவறு இருக்கின்றது? மாகாணசபை முறைமை வேண்டாம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சொல்கின்றனர். ஆனால் மாகாணசபை முறைமையின் கீழான முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதில் அந்தக் கட்சியினருக்குள் பிடுங்குப்பாடு இருக்கின்றது.

தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன, சிங்கள மயமாக்கல் முன்னெடுக்கப்படுகிறது, வளம் சூறையாடப்படுகின்றது. மாகாணசபை முறைமை இருந்தால் இவற்றை ஓரளவாவது தடுக்க முடியும். நான் வடக்கு முதலமைச்சராக இருந்தபோது இவற்றையெல்லாம் முடிந்தவரை தடுத்திருந்தேன். மாகாணசபை எங்களுக்கு தீர்வு என்று நாங்கள் சொல்லவில்லை. அதில் பல குறைகள் இருக்கின்றன. இதனை 1987ஆம் ஆண்டே எமது தலைவர்கள் சுட்டிக்காட்டி இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். நாங்கள் கூட்டுச் சமஷ்டியைத்தான் வலியுறுத்துகின்றோம். அதிகாரப் பரவலாக்கத்தைக் கேட்கவில்லை. அதிகாரப் பகிர்வைக் கேட்கின்றோம். ஆனால் சமஷ்டி வரும் வரையில் மாகாணசபை முறைமையை வேண்டாம் என்று இருக்க முடியாது. சமஷ்டித் தீர்வு வரும்போது சிங்களம் பேசும் தமிழர்களே வடக்கு - கிழக்கில் இருக்கக் கூடும்.

இதேவேளை நாம் இந்தியாவிடம் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரியதற்கு சிங்களக் கட்சிகள், அதை தங்களிடம் ராஜபக்ச அரசிடம்தான் கேட்கவேண்டும் என்று சொல்கின்றன. நாங்கள் 73 ஆண்டுகளாக அவர்களிடம் கேட்டு எதுவும் கிடைக்கவில்லை என்பதால்தான் இந்தியாவிடம் கேட்கின்றோம்- என்றார். (ஒ-5,26)

## முன்னணிக்கு...

எதிர்வரும் 12ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி கோத்தாபயவின் அரசியல் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துகின்றது. இது வெளிப்படை உண்மை. அரசியல் காழ்ப்புணர்ச்சியில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தனக்குத் தேவையில்லை. அவர்கள் தேர்தலை பகிஷ்கரித்தாலே போதுமானது என்று கோத்தாபய சொன்னார். அதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்படுத்தினர். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்குவேன் என்று கோத்தாபய சொல்கின்றார். இங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம் என்று சவப்பெட்டிக்குள் அதைப் புதைப்போம் என்று பேரணியாகச் செல்கின்றனர். கோத்தாபய ராஜபக்ச எள் என்று சொன்னால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எண்ணெயாக நிற்பார்கள்- என்றார். (ஒ-5,26)

## இந்தியாவுக்கு...

கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். அந்தச் சந்திப்பு விரைவில் நடக்கும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரிலுள்ள தனியார் விடுதியில் அழைக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். இந்தியாவுக்கு தமிழ் கட்சிகள் 13ஆவது திருத்தத்தை வலியுறுத்தி அனுப்பிய கடிதம் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், எமது பிரச்சினைகள் தொடர்பில் எம்முடன் பேச வேண்டும். இந்தியாவுக்கு கடிதம் அனுப்புவதன் ஊடாக தென்பகுதி மக்கள் கோபமடைவார்கள். இந்தியா எமக்கு எவ்வாறு அழுத்தத்தை வழங்க முடியும் என்று அவர்கள் நினைப்பார்கள். இது தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான தீர்வுக்கு வழிவகுக்காது. மாறாக இப்போதுள்ள பிரச்சினையை இன்னமும் இழுத்துக் கொண்டு செல்வதற்கே தூபமிடும்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உட்பட அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்தவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரினேன். அவரும் அதற்கு இணங்கியுள்ளார். விரைவில் இந்தப் பேச்சு நடக்கும்- என்றார். (ஒ-5)

## வடக்கில்...

கும் என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா. இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

கீழைக் காற்றின் செல்வாக்கின் காரணமாக இன்று (நேற்று) முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் வடக்கு மாகாணத்தில் பரவலாக மழை கிடைக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மழை கிடைக்கும் என்பதனால் நெல் அறுவடை செயற்பாடுகளை உரிய முன்னேற்பாடுகளுடனும், போதிய திட்டமிடல்களுடனும் மேற்கொள்வது சிறந்தது - என்றார். (ம)

## கோப்பாய்...

பெருந்தொற்றின் பாதகமான நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. குறித்த நாள்களில் அலுவலகச் செயற்பாடுகள் வழமைபோல இடம்பெறும் அதே வேளை கற்றல் செயற்பாடுகள் இணைய வழியூடாக இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கில் மழை...

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வாரங்களில் நால்வர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். நாடு பூராகவும் கொரோனா தற்போது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. ஜனவரி மாதத்தில் நேற்றுவரை (நேற்றுமுன்தினம் வரை) வடக்கு மாகாணத்தில் 726 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நாளொன்றுக்கு 10 பேர் மட்டும் இனங்காணப்பட்டுவந்த நிலையில் தற்போது நாள் ஒன்றுக்கு தினமும் 60 தொடக்கம் 70 பேர் வரையில் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்படுகின்றார்கள்.

ஒமிக்ரோன் திரிபு உலக நாடுகளில் தீவிரமாக பரவி வருகின்றது. எமது நாட்டிலும் இதன் தாக்கம் மிகையாக உணரப்பட்டுள்ளது. ஆகவே பொதுமக்கள் இந்தப் பெருந்தொற்றில் இருந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இந்த சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள இருக்கின்ற ஒரேயொரு பாதுகாப்பான விடயம் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதுதான். கொரோனாத் தடுப்பூசியின் முதலிரு டோஸ்களையும் பலரும் பெற்றுள்ள போதிலும் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் அற்றவர்களாகவே அநேகர் உள்ளனர். பூஸ்டர் தொடர்பில் பரப்பப்பட்ட தவறான பரப்புரைகளும் இந்த மந்த நிலைக்கு ஒரு காரணம். எனவே பொது மக்கள் இவ்வாறான பொய்ப் பரப்புரைகளுக்கு இடம்கொடுக்காமல், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும். பூஸ்டர் டோஸை அனைவரும் ஏற்றிக் கொள்ளவேண்டும்-என்றார். (ம-27,125)

## ஒத்திவைக்கக்...

வைக்குமாறுகோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சிவில் செயற்பாட்டாளர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த இந்த மனுவில் பிரதிவாதிகளாக, கல்வி அமைச்சர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக, உயர்தர மாணவர்களுக்கு கல்வித் திட்டத்தை நிறைவுசெய்ய சந்தர்ப்பம் கிட்டவில்லை என்று மனுதாரர் தனது வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## தெல்லிப்பழையில்...

பழை பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் இன்று நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-27)

## இந்திய...

பிரதேச செயலகத்தை வந்தடைந்தது. இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராகவும், இந்திய இழுவைப் படகுகளைத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் போராட்டக்காரர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன போராட்டத்தின் முடிவில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக அலுவலரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

வடக்கு கடற்பரப்பில் கடந்த 10 வருடங்களாக இந்திய மீனவர்களால் சட்டவிரோத தொழில்முறைகளும், சூழலுக்குப் பாதிப்பும் மீன்வளத்தை அழிக்கும் செயற்பாடுகளும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதனைக் கட்டுப்படுத்த 2018ஆம் ஆண்டு முதலாம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) திருத்தச் சட்டம், 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கடற்றொழில் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் ஆகிய இரு சட்டங்களும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்று வரைக்கும் நடைமுறைப்படுத்தப்படாது உள்ளன. இந்திய இழுவைமடிகளால் யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்களும் வடமாகாண மீனவர்களும் அடையும் துன்பம் சொல்லிமாளாதது. எனவே உரிய அதிகாரிகள் துரிதகதியில் செயற்பட்டு இதற்கொரு தீர்வை வழங்கவேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-27,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரித பொதிகள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
**11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை**

Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
**0777 554528**

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

**AHARAM HIGH STANDARD COLLEGE**
**காங்கேயன் துறைச்சாலை**

மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வியாண்டு – 2022 ஆரம்பம்

தரம் 06 – O/L
வரையான தமிழ் மொழி மூலம்
English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை
எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல
English medium வகுப்புக்கள் ஆரம்பம்

04.02.2022 [வெள்ளிக்கிழமை]
வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05
வரையான சித்தயோக நன்நாளன்று

அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

(CS.1210)

## பெயின் அடிப்பவர்கள் தேவை

கொழும்பு, யாழில் உள்ள உயரமான கட்டடங்களில் பெயின்ட் அடிப்பவர்கள், ஒப்பந்த அடிப்படையில் உடன் தேவை.
**076 893 6169**

## கட்டட இடிபாடு தேவை

பழைய கட்டட இடிபாடு அல்லது பழைய கட்டடம் மொத்தமாக உடன் விலைக்கு வாங்கப்படும்.
**076 893 6169**

## இரசாயனவியல் & உயிரியல்

பிரபல பாடசாலையின் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்களால் **தமிழ்** மற்றும் **ஆங்கில** மொழி மூலத்தில் **தனி** அல்லது **குழுவாக** கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
**076 7781442**

## சுத்திகரிப்பாளர் வேலைக்கு ஆளணி தேவை

அலுவலகங்களில் சுத்திகரிப்பு பணியை மேற்கொள்வதற்கு ஆண் / பெண் இருபாலாரும் தேவை. வயதெல்லை 20 - 50 வரை சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS.42357) (3/6)
**077 497 5962, 077 903 7288**

## சாரதி தேவை

சிவபூமி அறக்கட்டளைக்கு சாரதி தேவை விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி **சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்**
021 222 7938
(CS 18259) (3-6)

## வேலையாள்கள் தேவை

யாழ்.அக்ஷதை உயர்தர சைவ உணவகத்திற்கு இரவுப் பகுதி நேர வேலையாட்கள் தேவை.
1. உணவு பரிமாறுபவர்
2. உணவு பொதி செய்பவர்

நேரம் : மாலை 6 PM - 10 PM
**077 711 2269**
(CS 18265) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) கைதடிப்பிள்ளையார் கோயிலில் இருந்து 500m தூரம்.
**பார்வையிடும் நேரம்:**
காலை 6.00 முதல் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: **077 814 7389, 077 614 7333**
(CS 42488) (2.6)

## Accounting And Bookkeeping.

*For Individuals & Businesses*

- Accounting & Bookkeeping
- TAX & Consultancy
- Payroll & HR Services
- Professional Services

*Call Us Today!*
**070-480-3541**

## வேலை வாய்ப்பு

முன்னிலை வகிக்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் மட்டுப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு உள்ளதால் உடனடியாக முந்துங்கள்
வடமராட்சி எல்லைக்கு உட்பட்டவர்கள்
வயதெல்லை - 23 - 55 (ஆண். பெண்)
தொடர்புகளுக்கு: **074 178 5450**


## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 09 . 1938

இறப்பு 26 . 01 . 2022



## திருமதி அருமைச்செல்வநாயகி நடராசா

பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருமைச்செல்வநாயகி நடராசா அவர்கள் கடந்த (26.01.2022) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு - செல்லாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், உதயகுமரன் (பிரான்ஸ்), விஜியகுமரன் (டென்மார்க்), விஜியகுமாரி (டென்மார்க்), ஜெயக்குமரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கௌரிதேவி, சிவசோதி, கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிரிஷிகா, சரணுகா, திலானிகா, கபிலன்-அபிரா, அனுலன், யகிஸ், சஹானா, ராகுல், கோகுல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இராஜபரமேஸ்வரி, பாலச்சந்திரன், விமலேஸ்வரி, சிவபாதசுந்தரம், கமலேஸ்வரி, புவனேஸ்வரி, கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் சிவராசா காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**மகன் :- ந.உதயகுமரன் (0033605989739)**
**மகன் :- ந.விஜியகுமரன் (004560227744)**
**மகள் :- சி. விஜியகுமரி (0045601897533)**
**மகன் :- ந.ஜெயக்குமரன் (0049177565 3950)**

**பன்னாலை,**
**தெல்லிப்பழை,**
**077 531 9929**

(CR 7165) 1/6

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 03 . 1936

மறைவு 20 . 01 . 2012



மீசாலை

அமரர் திருமதி

## புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)

**திதி: அபரபக்க துவாதசி**

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் பத்தாகி தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

"சிவகிரி" மீசாலை வடக்கு, மீசாலை.

72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(cs 42420) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.